( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023

தரம் ஐந்து மாணவர்களுக்கான

# முன்னோடிப் பரீட்சை - இல-06


## வினாத்தாள் - I

சுட்டெண்:- ......................................................



நேரம் :- 1 மணித்தியாலம்

- பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
  - உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  - மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.




(01) 1ஆம், 2ஆம் உருக்களுக்கிடையிலுள்ள தொடர்பின்படி, 3 ஆவது உருவிற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.



உரு 1 உரு 2 உரு 3

(1)  (2)  (3) 

(02) மிகக் குறைந்த தொடர்பினைக் கொண்ட உருச்சோடியைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(03) கீழே தரப்பட்டுள்ள வினாவில் காணப்படும் சொற்களில் சிலவற்றை ஒழுங்குபடுத்துவதன் மூலம் கருத்துள்ள வாக்கியமொன்றை ஆக்க முடியும். அவ்வாறு ஒழுங்குபடுத்தக்கூடிய சொற்களின் ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

A - ஓவியத்தை B - தொங்க C - வந்தனர் D - அழகிய
E - விட்டார்கள் F - பிடிக்கப் G - சுவரிலே H - பேருந்து

(1) D, A, G, B, E (2) A, F, H, D, C (3) G, A, D, H, E

(04) 2, 7, 1, 8, 3, 5, 4, 2, 6, 9, 0, 8 இவ்விலக்கங்களின் வரிசையில் அடுத்தடுத்துவரும் இரண்டு இலக்கங்களின் கூட்டுத்தொகை 8 ஆக இருக்கக்கூடிய சோடி இலக்கங்கள் எத்தனை காணப்படுகின்றன?


(1) 3 (2) 4 (3) 5

(05) கீழே தரப்பட்ட மூன்று சொற்சோடிகளில் இரண்டு சமனான தொடர்பைக் கொண்டவை. அவ்வாறு சமனான தொடர்பைக் கொண்டிராத சொற்சோடியைத் தெரிவு செய்க.

(1) நோய் - குணப்படுத்துதல் (2) பரீட்சை - சித்தியடைதல் (3) வியாபாரம் - நஷ்டப்படுதல்


(06) ○ + △ = 27 , ○ + ○ = △ எனின், ○ இன் பெறுமானம் யாது?

(1) 8 (2) 9 (3) 7

(07) 


இவ்வுருவில் எண்கள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, A எனும் வெற்றுக்கூட்டிற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

(1) 12 (2) 27 (3) 23

(08) 

இவ்வுரு சம அளவிலான சிறிய சதுர வடிவங்களினால் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, இவ்வுருவில் காணக்கிடைக்கும் சதுர வடிவங்களின் எண்ணிக்கை,

(1) 11 (2) 10 (3) 8

(09) பிள்ளையொன்று புகைப்படம் ஒன்றைக் காட்டி பின்வருமாறு கூறியது.

"எனக்கு சகோதர சகோதரிகள் இல்லை.
இந்த புகைப்படத்தில் இருப்பவரின் தந்தை எனது தந்தையின் மகன் ஆவார்."

அதன்படி, இப்பிள்ளை யாருடைய புகைப்படத்தைக் காட்டியது?

(1) தனது மகனின் புகைப்படத்தை (2) தனது தந்தையின் புகைப்படத்தை (3) தனது புகைப்படத்தை


(10) கீழுள்ள எண்களில் எண் கோலமொன்றை உருவாக்குவதற்கு A , B ஆகிய வெற்றிடங்களில் இடப்படவேண்டிய எண்கள் முறையே,

2 , 4 , 7 , A , 16 , 22 , B


(1) A - 10 , B - 30 (2) A - 11 , B - 29 (3) A - 9 , B - 26


kalvi.lk


(11) சதுர வடிவக் கடதாசியொன்று கீழே காட்டியவாறு மூன்று தடவைகள் மடிக்கப்பட்டு அதன் பின்னர் உரு A காட்டும் முறையில் சரிநடுவில் ஒரு துளையிடப்பட்டது.




அதன்படி, அக்கடதாசித் துண்டை விரித்தால் காணக்கிடைக்கும் முறை,

(1) 

(2) 

(3) 

(12) மூன்று மனிதர்கள் வைத்தியசாலைக்குச் சென்ற நேரமும் அங்கிருந்து வெளியேறிய நேரமும் கீழே தரப்பட்டுள்ளன.

- **அமீன்** :- மு.ப 8.15 இற்குச் சென்று மு.ப 11.00 இற்கு வெளியேறினான்.
- **வசீம்** :- மு.ப 10.30 இற்குச் சென்று மு.ப 11.45 இற்கு வெளியேறினான்.
- **நஸீர்** :- மு.ப 7.30 இற்குச் சென்று மு.ப 11.30 இற்கு வெளியேறினான்.

மேலேயுள்ள தகவல்களுக்கேற்ப, மூவரும் வைத்தியசாலையில் ஒன்றாக இருந்த நேரம் எவ்வளவு?

(1) 1 மணித்தியாலம் (2) 45 நிமிடங்கள் (3) 30 நிமிடங்கள்

(13) 

இப்பிள்ளை வடக்குத் திசையில் ஓடுகிறது. அதன்படி, தற்போது,

(1) மாலை நேரம் (2) காலை நேரம் (3) கூறமுடியாது.

(14) ராஜா திங்கள், புதன், ஞாயிறு ஆகிய நாட்களைத் தவிர ஏனைய நாட்களில் வேலைக்குச் செல்வான். குமார் புதன், வெள்ளி, சனி ஆகிய நாட்களைத் தவிர ஏனைய நாட்களில் வேலைக்குச் செல்வான். அதன்படி, இருவரும் ஒன்றாக வேலைக்குச் செல்லும் நாட்கள்,

(1) வெள்ளி, திங்கள் (2) செவ்வாய், வியாழன் (3) சனி, ஞாயிறு

(15) மாலா, சீதாவிற்கும் நீலாவிற்கும் முன்னர் பாடசாலைக்குச் சென்றாள் எனினும் விமலாவிற்குப் பின்னராகும். பாடசாலைக்கு முதலில் சென்றவர் விமலா அல்ல. அதன்படி, மாலா, சீதா, கமலா, நீலா, விமலா ஆகிய ஐந்து பிள்ளைகளில் பாடசாலைக்கு முதலில் சென்றவர் யார்?

(1) கமலா (2) மாலா (3) சீதா

(16) ஆங்கில அகரவரிசை ஒழுங்கில் எழுத்து L தொடக்கம் எழுத்து T வரை எழுதும்போது சரிநடுவில் வரும் ஆங்கில எழுத்து,

(1) O (2) Q (3) P

(17) இரண்டு வருடங்களுக்கு முன் அண்ணா, அக்கா, தம்பி ஆகிய மூவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 28 ஆகும். அதன்படி, தற்போது மூவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை,

(1) 30 (2) 34 (3) 26

(18) 1 இலிருந்து 6 வரை இலக்கமிடப்பட்டுள்ள தாயக்கட்டையை மூன்று திசைகளிலிருந்து பார்க்கும்போது தென்படும் முறைகளைப் பின்வரும் உருக்கள் காட்டுகின்றன.




அதன்படி, 3 இற்கு எதிர்ப்பக்கத்திலுள்ள இலக்கம்,

(1) 4 (2) 5 (3) 1

(19) கீழே தரப்பட்டுள்ள வினாவில் ஒரு குறித்த தொடர்பைக் கொண்ட சொற்கள் தரப்பட்டுள்ளன. அத்தொடர்புக்கு மிகவும் நெருங்கிய தொடர்பைக் காட்டும் வேறு நான்கு சொற்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.


**பிள்ளை - கல்வி - பாடசாலை - ஆசிரியர்**

(1) கைதி - குற்றம் - நீதிமன்றம் - வழக்கறிஞர் (2) பயணி - வீதி - பேருந்து - ஓட்டுனர்

(3) நோயாளி - மருந்து - வைத்தியசாலை - மருத்துவர்

(20) 1, 3, 9 என்ற மூன்று இலக்கங்களையும் பயன்படுத்தி 150 ஐ விடக் கூடியதும் 920 இற்கு குறைந்ததும், ஒன்றுக்கொன்று வேறுபாடுடைய எத்தனை எண்களை எழுதமுடியும்?

(1) 5 (2) 4 (3) 2

(21) 


முக்கோணத்திற்கு உரித்துடையதற்ற ஆனால் வட்டத்திற்கும் செவ்வகத்திற்கும் உரித்துடைய எண்,

(1) 3 (2) 7 (3) 4

kalvi.lk

(22) பின்வரும் பழமொழியின் கருத்தைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க. **சுட்டெண்:-.....................................**


**பழமொழி :-** முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்.

(1) விடாது முயற்சி செய்தால் வெற்றி கிட்டுவது நிச்சயம்

(2) விடாது முயற்சி செய்யும் சில சந்தர்ப்பங்களில் வெற்றி கிடைக்காது.

(3) விடாது முயற்சி செய்யாதவர்களும் வெற்றி பெறலாம்.


(23)




இவ்வுருளையை A திசையிலிருந்துப் பார்க்கும்போது வரையப்பட்டுள்ள வட்டங்கள் உருவில் காட்டப்பட்டுள்ளவாறு தென்படும். இவ்வுருளையை அதன் எதிர்த்திசையிலிருந்து (B திசையில்) பார்க்கும்போதும் இதே முறையில் தென்படும். அதன்படி, இவ்வுருளையைச் சுற்றி வரையப்பட்டுள்ள வட்டங்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 14 (2) 12 (3) 16

(24)




தரப்பட்டுள்ள பயணப்பாதை ஐந்து இடங்கள் அமைந்துள்ள முறையையும் அவற்றுக்கு இடையிலான தூரங்களையும் காட்டுகின்றது. ஒருவர் வீட்டிலிருந்து பொலிஸ் நிலையத்திற்கு மிகக் குறுகிய பாதையில் பயணித்தார். அவ்வாறு பயணிக்கும்போது அவர் சந்தித்த இடங்களை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,


(1) வீடு - நீதிமன்றம் - பொலிஸ் நிலையம் (2) வீடு - நீதிமன்றம் - பாடசாலை - பொலிஸ் நிலையம்

(3) வீடு - வைத்தியசாலை - நீதிமன்றம் - பொலிஸ் நிலையம்

(25) மீனா, சித்ரா, யமுனா ஆகிய தாய்மார்களின் மகள்கள் திவ்யா, உமா, நித்யா ஆகிய மூவராவர். தாய்மார்களின் பெயர்களின் ஒழுங்குமுறைக்கேற்ப மகள்களின் பெயர்கள் எழுதப்படவில்லை. நித்யா மற்றும் மீனாவின் மகள் ஒரே வகுப்பில் படிக்கின்றனர். யமுனாவின் மகள் நித்யா அல்ல. அதன்படி, சித்ராவின் மகள்,

(1) திவ்யா (2) உமா (3) நித்யா

(26)



ஒரேயளவான 27 சிறிய சதுரமுகிகளை ஒன்றுடன் ஒன்று ஒட்டுவதன் மூலம் இப்பெரிய சதுரமுகி அமைக்கப்பட்டுள்ளது. இப்பெரிய சதுரமுகியின் எல்லா முகங்களும் உருவில் காட்டியவாறு நிறந் தீட்டப்பட்ட பின்னர் புள்ளிக்கோடுகளின் வழியே சிறிய சதுரமுகிகளாக வெட்டப்பட்டது. அதன்படி, வெட்டிய பின் எந்தவொரு பக்கமும் நிறந் தீட்டப்படாத சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை,


(1) 8 (2) 9 (3) 10

(27) ரவியிடம் ஐந்து வர்ணங்களில் ஐந்து பென்சில்கள் உள்ளன. அவரிடம் உள்ள மூலவர்ணங்களைக் கொண்ட பென்சில்களின் எண்ணிக்கை ஒன்றை விட அதிகமாகவும் மூன்றை விட குறைவாகவும் உள்ளன. அதன்படி, அவரிடம் உள்ள பென்சில்களின் வர்ணங்களாக இருக்கக்கூடியது,

(1) வெள்ளை, நீலம், சிவப்பு, மஞ்சள் (2) மஞ்சள், கறுப்பு, பச்சை, செம்மஞ்சள்

(3) சிவப்பு, ஊதா, வெள்ளை, நீலம்


(28)




உருவில் காட்டப்பட்டுள்ளபடி, ஆங்கில எழுத்துக்கள் இடப்பட்டுள்ள சக்கரமொன்று அம்புக்குறி காட்டிய திசையில் முன்னோக்கிச் சுழன்றுச் சென்றது. இப்போது இலக்கம் 2 மீது A எனும் ஆங்கில எழுத்து அமைந்துள்ளது. அதன்படி, இலக்கம் 9 மீது வரக்கூடிய ஆங்கில எழுத்து,

(1) H (2) G (3) F

(29)




இந்த கடிகாரம் இரண்டு மணிக்கு நின்று விட்டது. அதன்படி, இந்த கடிகாரம் ஒரு நாளைக்கு எத்தனை தடவைகள் சரியான நேரத்தைக் காட்டுகிறது?

(1) 1 தடவை (2) 2 தடவைகள்

(3) எந்த சந்தர்ப்பத்திலும் நேரம் சரியாக காட்டப்படவில்லை

(30) "அண்ணன் பிறந்த தினத்தில் தங்கைக்கு பரிசு வாங்கித்தந்ததாக அப்பா சொன்னார்." இக்கூற்று,

(1) பிழையானது (2) சரியானது (3) கூறமுடியாது

kalvi.lk

(31) கிணறு ஒன்றைக் கட்டுவதற்கு 3 மனிதர்களுக்கு 8 நாட்கள் தேவை எனின், 2 மனிதர்களுக்கு எத்தனை நாட்கள் தேவைப்படும்?

(1) 6 நாட்கள் (2) 12 நாட்கள் (3) 10 நாட்கள்


(32) சச்சின் ஒரு குறிப்பிட்ட புத்தகத்தின் 27 ஆம் பக்கத்திலிருந்து 76 ஆம் பக்கம் வரை வாசித்தான். 27 ஆம் பக்கம் புத்தகத்தின் வலது பக்கம் எனின், அவன் வாசித்த தாள்களின் எண்ணிக்கை,

(1) 24 (2) 49 (3) 25

(33) இன்று திங்கட்கிழமை ஆகும். நேற்று முன் தினத்திற்கும் கடந்த திங்கட்கிழமைக்கும் இடையேயுள்ள நாட்களின் எண்ணிக்கை,

(1) 4 (2) 3 (3) 5

(34)



அருகில் சதுர வடிவான அடித்தளத்தைக் கொண்ட திண்மம் ஒன்று தரப்பட்டுள்ளது. இத்திண்மம் புள்ளிக்கோடுகளின் வழியே இரு துண்டுகளாக வெட்டப்பட்டது. அதன்படி, வெட்டிய பின் திண்மத்தின் கீழ் பகுதியில் உள்ள மொத்த முகங்களின் எண்ணிக்கை,


(1) 4 (2) 6 (3) 8

(35) அளவிற்கேற்ப அதிகரித்துச் செல்லும் ஒழுங்கில் எழுதப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) எழுத்து - சொல் - வாக்கியம் - பந்தி (2) நகரம் - மாகாணம் - மாவட்டம் - நாடு

(3) எலி - பூனை - எருது - நாய்

● **நகரமொன்றின் பிரதான வீதிகள் அமைந்துள்ள முறையை கீழே உள்ள உரு காட்டுகிறது. அதன்படி, இலக்கம் (36), இலக்கம் (37) ஆகிய வினாக்களுக்குரிய மிகச் சரியான விடைகளைத் தெரிவு செய்க.**




(36) ஆசிரியர், குமாருக்கு வழங்கிய அறிவுரை கீழே தரப்பட்டுள்ளது.

பாடசாலையிலிருந்து நேராகச் செல்லுங்கள். வலதுக் கைப்பக்கம் திரும்பிச் செல்லுங்கள். அடுத்த சந்தியில் இடதுக் கைப்பக்கம் திரும்பிச் செல்லுங்கள். அதன் பின் வலதுக் கைப்பக்கம் திரும்பிச் செல்லுங்கள். அடுத்த சந்தியில் இடதுக் கைப்பக்கம் திரும்பி நேராகச் செல்லுங்கள். அதன்படி, குமார் சந்திக்கும் இடம்,

(1) R (2) S (3) M

(37) ஆசிரியர், ஆசிமிற்கு வழங்கிய அறிவுரை கீழே தரப்பட்டுள்ளது.

பாடசாலையிலிருந்து நேராகச் செல்லுங்கள். இடதுக் கைப்பக்கம் திரும்பிச் செல்லுங்கள். அடுத்த சந்தியில் வலதுக் கைப்பக்கம் திரும்பி நேராகச் செல்லுங்கள். பாதை முடிவில் மீண்டும் வலதுக் கைப்பக்கம் திரும்பிச் செல்லுங்கள். அடுத்த சந்தியில் இடதுக் கைப்பக்கம் திரும்பி நேராகச் செல்லுங்கள். அதன்படி, ஆசிம் சந்திக்கும் இடம்,

(1) S (2) T (3) N

(38) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா! - பின்னர்ச்
செம்பொற் குடம்போல தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாராயம்மா! - ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா!

இப்பாடல் எதைப் பற்றி கூறப்படுகிறது?

(1) சந்திரன்

(2) சூரியன்

(3) நட்சத்திரம்

39) ஒரு வருடத்தில் 31 நாட்களைக் கொண்ட மாதங்களை இலக்கத்தில் எழுதினால் கிடைப்பது,

(1) 1, 3, 5, 7, 8, 10, 12 (2) 1, 3, 5, 7, 9, 11 (3) 1, 3, 5, 6, 8, 10, 12

40) கீழே தரப்பட்டுள்ள கூற்று பிழையானதற்கான காரணத்தைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.

மணல் மண்ணில் சட்டி செய்த குயவன், அதனை அதிக விலைக்கு விற்றான்.

(1) குயவனுக்கு தச்சுவேலை மட்டுமே தெரியும் என்பதனாலாகும்.

(2) மணல் மண்ணால் செய்யப்பட்ட சட்டிகளின் விலை குறைவு என்பதனாலாகும்.

(3) சட்டிகள் மணல் மண்ணால் செய்யப்படுவதில்லை என்பதனாலாகும்.

kalvi.lk

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-06

# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - *** உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - *** மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

காற்று வீசும் போது பட்டத்தை ஏற்றினார்கள். பட்டம் மெல்ல மெல்ல மேலே ஏறியது. வகுப்பாசிரியர் ரம்யா மாணவர்கள் அனைவரும் பட்டம் விடுவதை பார்த்துக்கொண்டு இருந்தார். ரவி செய்த பட்டம் மிகவும் அழகாக பறந்தது. வாணி விட்ட பட்டம் மரத்தில் சிக்கி அறுந்து விட்டது. அப்பொழுது குமார், அவனிடம் இருந்த அழகான பட்டத்தை வாணிக்கு கொடுத்தான். வகுப்பாசிரியர் குமாரை பாராட்டினார்.

(i) பந்தியிலுள்ள அடுக்குமொழிச் சொல்லை எழுதுக. ..................................................

(ii) "பட்டத்தை" என்பதன் பன்மை வடிவினை எழுதுக. ..................................................

(iii) பந்தியில் இடம்பெற்றுள்ள பெயரடைமொழிச் சொல் எது? ..................................................

(iv) உயர்திணை பன்மை பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக. ..................................................

(v) "வீசும்" இந்த சொல்லில் வந்துள்ள உயிர்க்குறிகளின் பெயர்களை எழுதுக. ..................................................

**(02) பின்வரும் பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கில் எழுதுக.**

(i) காச்சல் :- ..................................................  (ii) தேத்தண்ணி :- ..................................................

**(03) பின்வரும் வாக்கியத்தை எதிர்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.**

மாமா யாழ்ப்பாணத்திற்குச் சென்றார் :- ..................................................

**(04) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்திலுள்ள அடைமொழிகளை தெரிவுசெய்து எழுதுக.**

கறுப்புப் பூனை சிறிய எலியைப் பிடிக்க மெதுவாகப் பதுங்கியது. :- ..................................................

**(05) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலை என்பவற்றின் தொடர்பு சரியாயின் ( ✓ ) எனவும், பிழையாயின் ( X ) எனவும் எதிரேயுள்ள அடைப்பினுள் அடையாளமிடுக.**

(i) ஆசிரியர்களும் மாணவர்களும் பாடசாலைக்குப் போனார்கள். (     )

(ii) உழவன் வயலை உழுத பின் தானியங்களை விதைத்தனர். (     )

(iii) நேற்றுப் பாடசாலைக்குச் சென்று மோகன் பாடம் படித்தான். (     )

(iv) நாளைக்கு அப்பாவும் நானும் வெளிநாடு செல்கின்றோம். (     )

**(06) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அறிவித்தலா? அறிவுறுத்தலா? எனத் தெரிந்து அடைப்பினுள் எழுதுக.**

(i) முதலாம் தவணைக்கான பரீட்சைக் கட்டணங்களை எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் செலுத்தவும். (........................)

(ii) தினமும் எட்டு மணி நேரம் உறங்குங்கள். (........................)

(iii) இவ்விடத்தில் குப்பைகளைக் கொட்ட வேண்டாம். (........................)

**(07) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொற்றொடருக்கும் உரிய தனிச் சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(i) பேருந்தில் பயணச்சீட்டு வழங்குபவர். :- ..................................................

(ii) நடக்க இருப்பவற்றை முன்னரே கூறுபவர். :- ..................................................

**(08) கீழே தரப்பட்டுள்ள பழமொழியின் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களைப் புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.**

அடம்பன் .................................................. திரண்டால் ..................................................

**(09) பின்வரும் இணைமொழிகளின் கருத்துக்களை எதிரே தரப்பட்டுள்ள புள்ளிக்கோடுகளில் எழுதுக.**

(i) காடும் மேடும் :- ..................................................  (ii) ஆடிப்பாடி :- ..................................................

**(10) பின்வரும் சொற்கள் குறிக்கும் ஆங்கிலச் சொல்லின் கீழ்க் கோடிடுக.**


(i) ஓடுதல் :- ( go , come , run )  (ii) பாய்தல் :- ( jump , walk , start )

kalvi.lk

(11) சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) elephent / elephant / elaphant (ii) Rainbow / Rainbaw / Rainboa

(12) கீழே தரப்பட்டுள்ள உருவில் பிரதான இரு திசைகள் காட்டப்பட்டுள்ளன. ஏனைய இரு திசைகளையும் வெற்றுக்கூடுகளினுள்ளே ஆங்கிலத்தில் எழுதுக.




(13) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய கருத்துக்களைத் தமிழில் எழுதுக.

(i) லியன்ன :- ........................................................ (ii) கியவன்ன :- ........................................................

(14) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

தண்ணீர் குடியுங்கள் :- ........................................................................................................


(15) [3] [49] [8] இங்கு காட்டப்பட்டுள்ள மூன்று கார்ட்போர்ட் அட்டைகளையும் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகப் பெரிய எண் யாது? ........................................................................

(16) 27 இல் ஆரம்பித்து வித்தியாசம் 7 ஆல் அதிகரிக்கும் எண் கோலத்தை எழுதுக. ..................................

(17) பூக்கூடை ஒன்றில் 28 பூக்கள் உள்ளன. அப்பூக்களில் $\frac{2}{4}$ சிவப்பு நிறப் பூக்களாகும். $\frac{1}{4}$ வெள்ளை நிறப் பூக்களாகும். மீதமுள்ளவை மஞ்சள் நிறப் பூக்களாகும். அதன்படி, பூக்கூடையிலுள்ள மஞ்சள் நிறப் பூக்களின் எண்ணிக்கை யாது?..........

(18) கீழே தரப்பட்டுள்ள எண்களைப் பெரிய எண்ணிலிருந்து சிறிய எண் வரையான ஒழுங்கில் (இறங்குவரிசையில்) எழுதுக.

$\frac{7}{10}$ , $\frac{9}{10}$ , $\frac{1}{10}$ , $\frac{4}{10}$ :- ........................................................................................

(19) 

உருவில் காட்டப்பட்டுள்ள திண்மத்தின்,

(i) விளிம்புகளின் எண்ணிக்கை யாது? .............. (ii) உச்சிகளின் எண்ணிக்கை யாது? ..................

(20) பாடசாலை பி.ப 1.30 இற்கு முடிவடைகின்றது. இந்நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக. ...................

(21) பயிற்சிக் கொப்பி ஒன்றின் விலை ரூபாய் 40.75 ஆகும். பேனையொன்றின் விலை ரூபாய் 24.75 ஆகும். அதன்படி, பயிற்சிக் கொப்பியொன்றினதும் பேனையொன்றினதும் மொத்த விலை எவ்வளவு? ..................................................

(22)

| 9 | 6 | 2 |
|---|---|---|
| 4 | | 7 |

கட்டத்தினுள் உள்ள எல்லா இலக்கங்களையும் கொண்டு ஆக்கக்கூடிய ஐந்து இலக்கங்களைக் கொண்ட மிகப் பெரிய எண்ணை எழுதுக. ........................................

(23) மீனாவிடம் IX பென்சில்கள் உள்ளன. பாத்திமாவிடம் VIII பென்சில்கள் உள்ளன. சியானாவிடம் VI பென்சில்கள் உள்ளன. அதன்படி, மூவரிடமும் உள்ள பென்சில்களின் மொத்த எண்ணிக்கையை இந்து அராபிய எண்களில் எழுதுக.

........................................................................

(24) தொட்டியொன்றில் நிரப்பத்தக்க நீரின் கனவளவு 2460 லீற்றர் ஆகும். அத்தொட்டியில் தற்போது 1690 லீற்றர் நீர் உள்ளது. எஞ்சியுள்ள பகுதியை நிரப்பத் தேவைப்படும் நீரின் கனவளவு யாது? ......................................................

(25) (i) ஒருவருக்கு 4 பென்சில்கள் வீதம் 450 பென்சில்களை எத்தனை பேருக்குக் கொடுக்கலாம்? ..............................

(ii) அவ்வாறு கொடுத்த பின்னர் எத்தனை பென்சில்கள் எஞ்சியிருக்கும்? ................................................

(26) ரூபாய் 59 பெறுமதியுள்ள பொருட்களை வாங்கிய நாதன் வியாபாரியிடம் ரூபாய் 100 நாணயத் தாள் ஒன்றினையும் ரூபாய் 9 இனையும் கொடுத்தான். அவனுக்குக் கிடைக்க வேண்டிய மீதிப் பணம் எவ்வளவு? ..........................

(27) 2m நீளமுள்ள ஒரு நாடாவிலிருந்து ஒவ்வொன்றும் 20cm நீளமுள்ள 7 நாடாத் துண்டுகள் வெட்டப்பட்டன. அதன்படி, எஞ்சியுள்ள நாடாத் துண்டின் நீளம் யாது? ........................................................

(28) பி.ப 3.00 மணிக்கு புறப்படக் குறிக்கப்பட்டிருந்த பேருந்து ஒன்று 10 நிமிடங்களுக்குப் பின்னர் பயணத்தை ஆரம்பித்தது. அப்பயணத்திற்கு 2 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் எடுத்தது. அதன்படி, பேருந்து பயணத்தைப் பூர்த்தி செய்த நேரம் யாது? ..................................................

Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

சுட்டெண்:-..........................................

**(29) குறித்த நாளொன்றில் நஸீரின் வீட்டின் முன்னாலுள்ள வீதியிலே வலதுப் பக்கத்திற்கும் இடதுப் பக்கத்திற்கும் சென்ற வாகனங்களின் எண்ணிக்கைப் பற்றிய தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.**

| வாகன வகை | சென்ற வாகனங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | வலதுப் பக்கத்திற்கு | இடதுப் பக்கத்திற்கு |
| பேருந்து | 12 | 16 |
| கார் | 44 | 32 |
| முச்சக்கர வண்டி | 27 | 36 |

(i) நஸீரின் வீட்டைக் கடந்து சென்ற கார்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..........................................

(ii) வலதுப் பக்கத்திற்குச் சென்ற வாகனங்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..........................................

(iii) நஸீரின் வீட்டின் முன் எந்த வகை வாகனம் மிகக் குறைவாகப் பயணித்தது? ..........................................


*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) மின் காந்தம் ஒன்றை தயாரிக்கும்போது பயன்படுத்தப்படும் ஆணி,
(1) அலுமினியம் ஆணி (2) இரும்பு ஆணி (3) பித்தளை ஆணி

(31) பின்வரும் பூக்களில் மாலை நேரத்தில் மலரும் பூ,
(1) அந்திமந்தாரை (2) நந்தியாவட்டை (3) பவளமல்லிகை

(32) இரவில் நடமாடும் பறவைகள்,
(1) இரட்டைச் சொண்டுக் குருவி, மரங்கொத்தி (2) சாக்குருவி, கோட்டான் (3) செண்பகம், கானாங்கோழி

(33) பழச் செய்கைகளுக்குப் பெரும்பாலும் தீங்கு விளைவிக்கும் பிராணி,
(1) தேன் குருவி (2) வெண்மூட்டுப்பூச்சி (3) தும்பி

(34) 
இவ்வுருவில் உள்ளவாறு வீட்டு முற்றத்தில் கட்டங்கள் வரையப்பட்டு விளையாடும் விளையாட்டு,
(1) கிட்டியடித்தல் (2) சடுகுடு (3) சில்லுக்கோடு (கட்டம் பாய்தல்)

(35) மின்னல் தாக்கத்தக்க சாத்தியம் குறைவாக இருப்பது,
(1) திறந்த மைதானத்தில் நிற்கும்போது (2) வாகனத்தில் செல்லும்போது (3) உயரமான மரத்தில் ஏறும்போது

(36) இலங்கை அரச இலச்சினையில் சௌபாக்கியத்தைக் குறிப்பது,
(1) சூரியனும் சந்திரனும் (2) தர்ம சக்கரம் (3) நிறைகுடம்

(37) சமாதானத்தின் சின்னமாகக் கருதப்படுவது,
(1) வெண்புறா (2) வெள்ளை அன்னம் (3) வெள்ளைக் கொக்கு

(38) வீதியைக் கடந்து செல்லும்போது பார்க்க வேண்டிய பக்கங்களை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,
(1) இடப்பக்கம் - வலப்பக்கம் - இடப்பக்கம் (2) வலப்பக்கம் - இடப்பக்கம் - வலப்பக்கம்
(3) வலப்பக்கம் - இடப்பக்கம் - முன்பக்கம்

(39) மைதானத்தின் நடுவில் வலையினை பயன்படுத்தி விளையாடும் விளையாட்டு அல்லாதது,
(1) உதைப்பந்தாட்டம் (2) பூப்பந்து (3) வொலிபோல் (கரப்பந்து)

(40) சமைக்கும்போது ஏப்ரன் அணிவது,
(1) உணவு மாசுபடுவதைத் தடுப்பதற்கு (2) உணவை மிக விரைவாக சமைப்பதற்கு
(3) சமைக்கும்போது ஆடையில் கறைபடுவதை தவிர்ப்பதற்கு

(41) ஒரு அணியில் 7 பேர் விளையாடும் விளையாட்டு,
(1) எல்லே (2) வலைப்பந்து (3) கரப்பந்து (வொலிபோல்)

(42) இலங்கையின் முதன் முதலாக அமைக்கப்பட்ட குளம்,
(1) பசவக்குளம் (2) மின்னேரியாக்குளம் (3) கலாவாவி

(43) மீன்பிடி உபகரணங்கள் அல்லாதவை,
(1) தூண்டில், வீச்சுவலை (2) கரப்பு, அத்தாங்கு (3) நாம்புவ, நங்கூரம்

(44) ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு,
(1) 1972 (2) 1948 (3) 1928

(45) தேசிய கீதத்தை இசைக்கும்போது உடம்பை நிமிர்த்தி கால்களை ஒடுக்கி கைகளின் விரல்களை மடித்து நிற்கும் நிலை,
(1) இலகுவாக நிற்றல் (2) நேராக நிற்றல் (3) கவனமாக நிற்றல்

(46) அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்கள் அமைந்துள்ள மாகாணம்,
(1) வடமத்திய மாகாணம் (2) கிழக்கு மாகாணம் (3) வட மாகாணம்

Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

(47) அபயவாவியைக் (பசவக்குளம்) கட்டுவித்த மன்னன்,

(1) மகாசேனன் (2) பண்டுகாபயன் (3) தாதுசேனன்

(48) மின்சாரம் கடத்தப்படாதப் பொருட்கள்,

(1) இறப்பர், பிளாஸ்டிக் (2) இரும்பு, பித்தளை (3) அலுமினியம், செப்புக் கம்பி

(49) கீழே முதலில் தரப்பட்டுள்ள உபகரணத்தைப் பயன்படுத்தும்போது இரண்டாவது உபகரணம் கட்டாயமாகத் தேவைப்படும். அவ்விரண்டு உபகரணங்களும் அடங்கிய விடையைத் தெரிவு செய்க.

(1) சீவுளி - அரம் (2) குறடு - திருகாணிச்செலுத்தி (3) உளி - தட்டுப்பொல்லு

(50) மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டுத் தொடரின் படிமுறைகளைச் சரியாகக் காட்டும் விடை,

(1) உள்ளத்தைத் தளர்த்துதல் - பிரார்த்தனை - மனவுறுதி - உடலைத் தளர்த்துதல் - மலர்வு

(2) உடலைத் தளர்த்துதல் - உள்ளத்தைத் தளர்த்துதல் - மனவுறுதி - பிரார்த்தனை - மலர்வு

(3) உடலைத் தளர்த்துதல் - உள்ளத்தைத் தளர்த்துதல் - மலர்வு - பிரார்த்தனை - மனவுறுதி

(51) மழைவீழ்ச்சியை அளக்கப் பயன்படும் அலகு,

(1) மில்லிமீற்றர் (2) மில்லிலீற்றர் (3) லீற்றர்

(52)



உரு A



உரு B

உரு A மற்றும் உரு B இல் காட்டப்பட்டுள்ள இரண்டு தாவரங்களின் பெயர்களை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,

(1) முடக்கொத்தான், நன்னாரி (2) முள்முருங்கை, சாத்தாவாரி

(3) திப்பிலி, இருவேரி

(53) பின்வரும் கருவிகளிடையே ஆணியை அறையவும் கழற்றவும் பயன்படுத்தத்தக்க மிகப் பொருத்தமான உபகரணம்,

(1)  (2)  (3) 


(54) தென் மாகாணத்தில் கடலுடன் கலக்கும் இரு நதிகள்,

(1) வளவ கங்கை, நில்வள கங்கை (2) மகாவலி கங்கை, களு கங்கை (3) களனி கங்கை, வளவ கங்கை

(55) முற்காலத்தில் மன்னர்கள் பயணம் செய்ய பயன்படுத்தப்பட்ட வாகனம்,

(1) சைக்கிள் (2) மாட்டு வண்டி (3) பல்லாக்கு

(56)



சட்டக்காந்தமொன்றை சரிநடுவில் கட்டித் தொங்கவிடப்பட்ட முறை இவ்வுருவில் காட்டப்பட்டுள்ளது. இச்சட்டக்காந்தம் ஓய்வு நிலைக்கு வரும்போது அதன் நீல நிற முனைவு எத்திசையைக் காட்டி நிற்கும்,

(1) வடக்குத் திசை (2) மேற்குத் திசை (3) தெற்குத் திசை

57) எறும்பு, தேனீ இரண்டிற்கும் பொதுவாக இருக்கும் இயல்பு அல்லாதது,

(1) ஒற்றுமையாக வேலை செய்தல். (2) பூக்களில் தேனை உறிஞ்சிக் குடித்தல். (3) உணவை சேமித்து வைத்தல்.

58) கரம் விளையாட்டில் பயன்படுத்தப்படும் சிவப்பு, வெள்ளை, கறுப்பு நிறக் காய்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 19 (2) 16 (3) 21

59)



உரு A



உரு B

உரு A, உரு B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள இரண்டு உபகரணங்களையும் பயன்படுத்தி இசைக்கப்படும் இரண்டு இசைக்கருவிகளையும் ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,

(1) நாதஸ்வரம், மத்தளம் (2) கிற்றார், உடுக்கை (3) வயலின், தம்பட்டம்

60)




**காலையில் பாடசாலை ஆரம்பமாவதற்கு முன் நடைபெறும் நிகழ்வை இவ்வுரு காட்டுகின்றது. இவ்வுருவைப் பார்த்து மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

(3) ..............................................................................................................................

kalvi.lk




## தரம் 5

# புலமைத் தேடல்

யாழ்ப்பாணம், வடமராட்சி செ.நிஷாந்தன், செ.விமல் ஆசிரியர்கள் எழுதிய புலமைத் தேடல் புலமைப்பரிசில் எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள்கள்

📮 நாடு பூராகவும் CASH ON DELIVERY
( தபால்காரரிடம் விலை 1250/- செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் )

**ORDER NOW**

**HOME DELIVERY**

**075 287 1457**

**BUY BOOKS**

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page